# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 28 புதன்கிழமை ( 12 - 07 - 2000 ) VALAMPURI ஒலி: 205


★ மானிப்பாய் இந்துவில் நேற்று இடம்பெற்ற மோதலில்

## அதிபர், ஆசிரியர், மாணவர் தாக்கப்பட்டனர்
## இடம்பெயர்ந்த இருவர் வைத்தியசாலையில்

### கல்வீச்சால் மாணவர் சிதறி ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்தோருக்கும், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்குமிடையில் நேற்று இடம்பெற்ற கைகலப்பில் ஆசிரியர்கள் இருவரும் சுமார் 15 மாணவர்களும் காயங்களுக்குள்ளானார்கள்.

இக்கைகலப்பில் இடம்பெயர்ந்திருந்த இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்தவர்களுக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்குமிடையேஇடம்பெற்ற மோதலினால் அதிபர் அலுவலகம், மோட்டார் (6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தோற்றலாம்

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாடப்பரீட்சையை எழுதிச் சித்தியடையத் தவறிய மாணவர்களில்வெளி மாவட்டங்களில் உள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியா வளாகத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதே வேளை ஆங்கில பாடத்துக்கான மீள் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

★ உத்தேச அதிகாரப் பகிர்வு தீர்வு யோசனை

# புலிகளுக்கு அனுப்புவது குறித்து
# பொ. ஐ. ஐ. முன்னணி ஆராயும்

### கூட்டத்திற்கு ஜனாதிபதி தலைமை தாங்குவார்

(கொழும்பு விசேட நிருபர்)

**உத்தேச அதிகாரப் பரவலாக்கல் நகல்த்திட்ட வரைபு சம்பந்தமாக அரசுக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இணக்கம் காணப்பட்ட முக்கிய விடயங்கள் பற்றியும் தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பின் பெறுபேறுகள் குறித்தும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழு இன்று மாலை கூடி ஆராயவுள்ளது**

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரி மாளிகையில் இச்செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இனப்பிரச்சினையின் தீர்வுக்கு வழிவகுக்குமெனக் கருதப்படும் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின் நகல் வரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கம்காணப்பட்ட விடயங்களை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாகஇன்று நடைபெறும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு தீர்வு யோசனைகளை அனுப்பி வைப்பதில் எதிர்காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நடை முறைகளும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை இத்தீர்வு யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைப்பதில் காலதாமதம் காட்டக்கூடாது என்றும், தீர்வு யோசனைகளை உடன் அனுப்புவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## வெலிகந்த இராணுவ மினிமுகாம் மீது புலிகள் தாக்குதல் இரு படையினர் பலி

(திருமலை)

திருமலை அனுராதபுரம் வீதியில் அமைந்துள்ள வெலிகந்த இராணுவ மினிமுகாம் மீது நேற்று முன்தினம் இரவு 9.10மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு ஊர்காவல்ப் படையினர் கொல்லப்பட்டதுடன் இரு படையினர் காயமடைந்துமுள்ளனர்.

இத்தாக்குதலில் இப்பகுதி விகாரையின் புத்த பிக்குவும் மேலும்இருவரும்காயமடைந்துள்ளனர் காயமடைந்தவர்கள் திருமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை அடுத்து இப்பகுதி இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்குள்ளாகி தேடுதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

★ வவுனியா- மன்னார் வீதியில்

## புலிகள் கிளைமோர்த் தாக்குதல்
## 5 இராணுவம் பலி 4 பேர் காயம்!

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் தாரிக்குளம் பகுதியில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். நான்கு இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இராணுவத்தினரின் பவள் கவச வாகனம் ஒன்று இக் கிளைமோர்த் தாக்குதலில் சிக்கிக் கொண்டபோதே இச் சம்பவம் இடம் பெற்றது.

இத் தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-வ)

★ அதிகாரப் பரவல் திட்டநகலை

## விடுதலைப்புலிகள் ஏற்ற பின்பே பாராளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்

### ரணில் அரசுக்கு யோசனை

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், ஐக்கியதேசியக்கட்சிக்குமிடையே இணக்கம் காணப்பட்டுள்ள விடயங்களை தமிழ்க்கட்சிகளுடன் பேசிய பின் தீர்வு யோசனைகளை பௌத்த மகா சங்கத்தினருக்கு விளக்க வேண்டுமென்றும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் ஐக்கிய தேசியகட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு (6ஆம் பக்கம்பார்க்க)

★ யுத்தக் கைதிகளைச் சந்திக்க

## ஜனாதிபதி அனுமதிக்காவிட்டால் கால்நடையாக வன்னி செல்வோம்!

விடுதலைப்புலிகளினால் யுத்தக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரையும் மற்றும் கைதிகளையும்பார்வையிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுமதி அளித்தால் என்ன அனுமதி அளிக்காவிட்டால் என்ன இம்மாதம் 24ஆம் திகதிக்குப்பின் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிக்கு செல்லப் போவதாக வடக்குக்கிழக்கு யுத்தத்தின் போது காணாமல் போன படைவீரரின் உறவினர்கள் சங்கத் தலைவர் ஈ.பி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கால்நடையாக சென்று வரவுள்ளதாக கூறினார். (வ)

## மானிப்பாய் இந்துவில் இன்று மறியல் போர்!

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து இடம்பெயர்ந்தவர்களை வெளியேறக் கோரி பாடசாலையின் பழைய மாணவர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் கல்லூரியின் நுழைவாசலில் இன்று மறியல் செய் (6 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை மோதலில் உயிரிழந்த புலிகள்

(வவுனியா)

அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதலின் போது தமது தரப்பில் உயிரிழந்த உறுப்பினர்களின் பெயர் விபரங்களை புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு:- (6 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

புலோலி தியாகராசா கேந்திராதேவி ஆட்பதிவு திணைக்கள அடையாள அட்டை இல. 775872942 V விசேட அ.அட்டை இல.0908019797 பிறிகேட் பாஸ் என்பன மூச்சம்பலத்திற்கும் உபய கதிர்காமக் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் A. N. S திருச்செல்வம். பிரதம நூலகர் புலோலி என்னும் இடத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/643)

### தவறிவிட்டது

இ. தங்கச்சியம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் அஞ்சனந் தாழ்வுச் சந்திக்கும் ஐந்து சந்திக்குமிடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் R. செல்வம், கற்குளம், கொட்டடி என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (1543)

## குருபூர்ணிமா வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள சத்தியசாயி பாபா சமித்தியில் குருபூர்ணிமா வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் காயத்திரி மந்திரம் ஓதுதல், பஜனை என்பன நடைபெற்றுத் தொடர்ந்து முன்னாள் கல்விப் பணிப்பளார் திரு. எஸ். வேலாயுதம் அவர்களின் '' பாபா காட்டிய வாழ்க்கை நெறி '' என்னும் தலைப்பிலானசொற்பொழிவு இடம்பெறும். (சு)

## உதவிப்பணம் வழங்கல்

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன் வடக்கு, உபஅஞ்சல் அலுவலகத்தில்மாதாந்தப் பொதுசன உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படிஆனிமாதக்கொடுப்பனவை உரியவர்கள் கொடுப்பனவு அட்டையுடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [சு.49]

## இன்று பகிஷ்கரிப்பு போராட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப்பணிமனை உத்தியோகத்தரால் இன்று 12ஆம் திகதி அடையாள பகிஷ்கரிப்பு போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த மாதம் 1ஆம் திகதி முதல் தொடர் போராட்டம் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளனர். (க)

## பஸ் விபத்து 10 பேர் பலி

(கொழும்பு)

ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் குழந்தைகள் உட்பட 10 பேர் மரணமாகினர்.

கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து ஒன்றும் பண்டாரவளை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான சிற்றூர்தி ஒன்றும் மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. [உ]

## பிரதேச செயலர் வேண்டுகோள்

(அச்சுவேலி)

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றோரின்சங்கத்தை தாபிப்பதற்கான கூட்டம் 15 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 10. 00 மணிக்கு யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கோப்பாய் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

1999 ஆம் ஆண்டு 40 ஆம் இலக்க அரசாங்க சேவை ஓய்வுபெற்றோரின் நம்பிக்கை பொறுப்பு நிதிச்சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் கீழ் அரசாங்க ஓய்வுபெற்றோரின் சங்கத்தினை ஆரம்பிப்பதற்கான மேற்படிகூட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-14)

★ ★ ★

(அச்சுவேலி)

அரசாங்கசேவையில்இருந்து ஓய்வு பெற்ற தென்மராட்சி பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர் சங்கத்தை தாபிப்பதற்கான முதலாவது கூட்டம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப .10. 00 மணிக்கு யா/ கோப்பாய்கிறிஸ்தவக்கல்லூரி கேட்போர் கூடத்தில்தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

1999 ஆம் ஆண்டு 40 ஆம் இலக்கஅரசாங்க சேவைஓய்வு பெற்றோரின் நம்பிக்கை பொறுப்பு நிதிச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் கீழ் அரசாங்க ஓய்வு பெற்றோரின் சங்கத்தினை ஆரம்பிப்பதற்கான மேற்படி கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-14)

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுடன் தொடர்பான அரசாங்க சேவைஓய்வு பெற்றோரின் சங்கத்தை தாபிப்பதற்கான முதலாவது கூட்டம் 15 ஆம் திகதி மு. ப. 10. 00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அனைத்து ஓய்வூதியர்களையும் அக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (க)

## சகுந்தலாதேவிக்கு பிணை அனுமதி கணவனும் மகனும் தடுப்பு முகாமில்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தங்கராஜா சகுந்தலா தேவியை [வயது44] பிணையில் செல்வதற்கு யாழ். மேலதிக நீதிவான் பி.சுப்பிரமணியம் அனுமதித்துள்ளார்.

இப்பெண்ணின் கணவரான இராசையா தங்கராஜா வயது -48 இவர்களது மகனான தங்கராஜா ரதீபன் [வயது23] ஆகியஇருவரையும் தொடர்ந்தும் காங்கேசன் தடுப்பு முகாமில் காவலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் இம் மூவரையும் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில்ஆஜர் செய்திருந்தனர்.

தங்கராஜாசகுந்தலாதேவி சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இப்பெண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டி இருப்பதாகவும் அதனால் அவரை பிணையில் விட வேண்டுமெனக் கோரி அவரது மருத்துவ அறிக்கையையும் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

இதனை அடுத்து ப்பெண்ணை பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட்டுச் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார். [வ-12,7]

## றொனிடிமெல் விளக்கம்

பாராளுமன்றத்தில் அவசர காலச்சட்ட நீடிப்புப் பிரேரணையை ஆதரித்தமைக்குரிய விளக்கத்தை றொனிடிமெல் ஐக்கியதேசியக்கட்சி செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்விளக்கமளிக்கும் கடிதம் நேற்று முன்தினம் மாலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு ஆதரவு வழங்கியமை குறித்து ஐ. தே. கட்சி றொனிடிமெலிடம் விளக்கம் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ: க)

## குருநகர் களஞ்சியத்திருட்டு சந்தேகநபர்களுக்கு பிணை மறுப்பு

குருநகரிலுள்ள யாழ். செயலக புனர்வாழ்வு களஞ்சியத்தில் இடம்பெற்ற திருட்டு தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான மூன்று சட்டத்தரணிகளும் தற்போதைய சூழ்நிலையில் இவர்களைப் பிணையில் விடுமாறும் இவர்கள் கடற்றொழிலை நம்பி வாழ்பவர்கள் என்றும் இவர்கள் விளக்கமறியலில் இருப்பதால் இவர்களின் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளன என்றும் தங்களின் வாதத்தின் போது எடுத்துக் கூறினர்.

சந்தேக நபர்களை பிணையில்விட பொலிஸார் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்துஎதிர்வரும்17 ஆம்திகதிக்கு மீண்டும் அவர்களை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (வ-12-7)

## வடமராட்சியில் இடம்பெயர்ந்தோருக்கு ஞாயிறுதோறும் இலவச சிகிச்சை

(புலோலி)

வன்செயல்களால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இலவச மருத்துவ சிகிச்சைகளை வழங்கி வருகின்றது.

இவ் இலவச மருத்துவசிகிச்சைகளை வழங்குவதற்கான நிதி உதவியினை கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் உப- தலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் வழங்கியுள்ளார்.

டாக்டர் என். யோகேஸ்வரதேவரின் உதவியுடன் இதுவரை தேவரையாளி இந்துக் கல்லூரி, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், குடத்தனை கிறிஸ்தவ தேவாலயங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு சேவாச்சிரமத்தால் இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் ஏனைய அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கும் இவ் இலவச மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதாகவும் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (க-51)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம்11ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம்செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் பதிவிலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 144321 ஏ | 144321 பி |
| 144321 சி | 144401 ஏ |
| 144401 பி | 144401 சி |
| 144401 டி | 144401 ஈ |
| 144401 எவ் | 144439 ஏ |
| 144506 ஏ | 144506 பி |
| 144506 சி | 144576 ஏ |
| 144576 பி | 144576 சி |
| 144576 டி | 144576 ஈ |
| 144680 ஏ | 144680 பி |
| 144680 சி | 144680 டி |
| 144680 ஈ | 144686 ஏ |
| 144686 பி | 148165 ஏ |
| 148175 ஏ | 152619 ஏ |
| 152623 ஏ | 152698 ஏ |
| 152754 ஏ | 152754 பி |
| 152754 சி | 152754 டி |
| 152754 ஈ | 152754 எவ் |
| 152754 ஜி | 152755 ஏ |
| 152755 பி | 152755 சி |
| 152755 டி | 152755 ஈ |
| 152755 எவ் | 152755 ஜி |
| 152756 ஏ | 152756 பி |
| 152756 சி | 152756 டி |
| 152756 ஈ | 152756 எவ் |
| 152756 ஜி | 152757 ஏ |
| 152757 பி | 152757 சி |
| 152757 டி | 152757 ஈ |
| 152757 எவ் | 152757 ஜி |
| 152758 ஏ | 152758 பி |
| 152758 சி | 152758 டி |
| 152758 ஈ | 152759 ஏ |
| 152759 பி | 152759 சி |
| 152759 டி | 152759 ஈ |
| 152760 ஏ | 152760 பி |
| 152760 சி | 152760 டி |
| 152760 ஈ | |
| 152761 ஏ | 152761 பி |
| 152761 சி | 152761 டி |
| 152853 ஏ | 152899 ஏ |
| 152907 ஏ | 152966 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 136684 ஏ | 136684 பி |
| 136690 ஏ | 136690 பி |
| 143362 ஏ | 143362 பி |
| 143363 ஏ | 145127 ஏ |
| 145127 பி | 145127 சி |
| 147715 ஏ | 147715 பி |
| 147715 சி | 148930 ஏ |
| 148935 ஏ | 148935 பி |
| 148935 சி | 148939 ஏ |
| 148945 ஏ | 148984 ஏ |
| 148984 பி | 148987 ஏ |
| 148989 ஏ | 148983 பி |
| 148993 ஏ | 148993 பி |
| 148997 ஏ | 148997 பி |
| 149001 ஏ | 149001 பி |
| 149001 சி | 149002 பி |
| 149002 பி | 149061 ஏ |
| 149061 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 141043 ஏ | 141044 ஏ |
| 144888 ஏ | 144888 பி |
| 144890 ஏ | 144892 ஏ |
| 144892 பி | 144892 சி |
| 144895 ஏ | 145031 ஏ |
| 145060 ஏ | 145296 ஏ |
| 145554 ஏ | 145554 பி |
| 145569 ஏ | 145569 பி |
| 145569 சி | 145577 ஏ |
| 145592 ஏ | 145610 ஏ |
| 145614 ஏ | 145630 ஏ |
| 145675 ஏ | 145703 ஏ |
| 145703 பி | 145725 ஏ |
| 145727 ஏ | 145732 ஏ |
| 144443 ஏ | 144443 பி |
| 144469 ஏ | 144469 பி |
| 144685 ஏ | 144723 ஏ |
| 144723 பி | 148113 ஏ |
| 148174 ஏ | 148174 பி |
| 148174 சி | 143938 ஏ |
| 143938 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 143764 ஏ | 143764 பி |
| 143809 ஏ | 143851 ஏ |
| 143852 ஏ | 143904 ஏ |
| 143904 பி | 144072 ஏ |
| 144072 பி | 144086 ஏ |
| 144086 பி | 144086 சி |
| 144123 ஏ | 144197 ஏ |
| 144197 பி | 146297 ஏ |
| 146297 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 143810 ஏ | 144033 ஏ |
| 152520 ஏ | 152552 ஏ |
| 152552 பி | 152552 சி |
| 152552 டி | |

### உடுவில்

| | |
|---|---|
| 145397 ஏ | 135730 ஏ |
| 135730 பி | 141973 ஏ |
| 141973 பி | 141983 ஏ |
| 143752 ஏ | 143752 பி |
| 143752 சி | 143752 டி |
| 143752 ஈ | 143752 எவ் |
| 143816 ஏ | 143816 பி |
| 143862 ஏ | 143862 பி |
| 143875 ஏ | 143875 பி |
| 143875 சி | 143962 ஏ |
| 143972 ஏ | 143972 பி |
| 143985 ஏ | 144053 ஏ |
| 144053 பி | 144053 சி |
| 144096 ஏ | 1443898 ஏ |
| 146353 ஏ | 147299 ஏ |
| 147299 பி | 147327 ஏ |
| 147327 பி | 147327 சி |
| 153410 ஏ | 153410 பி |

[சு]

## இந்தியா - பிரான்ஸ் பேச்சு விமான கொள்வனவிற்கும் முடிவு

[புதுடில்லி]

போர்த்தளபாடங்கள் கொள்வனவு செய்வது தொடர்பாகஇந்தியா பிரான்சுடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

மிராஜ்-2000இன10 போர் விமானங்களை பிரான்ஸிடம் இருந்து கொள்வனவு செய்வது தொடர்பாகவே பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாக தெரிய வந்துள்ளது.

இதனிடையே விமானம் கொள்வனவு செய்வது தொடர்பாக இந்திய விமானப்படை அதிகாரிகள் குழு வொன்று பிரான்ஸ் சென்றுள்ளது.

பிரான்ஸிடம் இருந்து இது போன்ற யுத்த விமானங்களையும், ஆயுதங்களையும் முன்பும் இந்தியா கொள்வனவு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## ஆபாச சஞ்சிகைகள் படங்கள் வெளியிடுவோர் மீது சட்ட நடவடிக்கை

[கொழும்பு]

ஆபாச சஞ்சிகைகள் படங்கள் வெளியிடுவோர் விற்பனை செய்வோர் அவற்றை வைத்திருப்போர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத்தலைவர் ஹரேந்திரடி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவற்றை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் வெளியிடுவோர் விற்பனை செய்வோர் மீது உரிய தண்டனைகள் வழங்குவதற்கு சட்டம் இடமளிக்க வேண்டும். இல்லையேல் சிறுவர் துஸ்பிரயோகங்கள் இன்னமும் தொடர வாய்ப்பாகி விடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-ரா)

## உபதபாற் கந்தோர் இடமாற்றம்

(இணுவில்)

வசாவிளான் குட்டியபுல உபதபாற்கந்தோர் இணுவில் தெற்கில் உள்ள தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கிவருகிறது.

மேற்படி பகுதிகளில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து மக்கள் இடம்பெயர்ந்து உடுவில் கந்தரோடை போன்ற பகுதிகளில் வசித்து வருவதையடுத்தே உப தபாற்கந்தோர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. (உ)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல. 18

ஆக்கம் : சுதாகர்

★ பின்வரும் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

(01) சந்திரன் முழுமையாகத் தெரியும் நாள்
1) அமாவாசை 2) மூன்றாம்பிறை 3) பௌர்ணமி

(02) சன நெருக்கடி மிக்க நகரங்களில் வீதிகளைக் கடப்பதற்கு அமைக்கப்படுவது
1) கை காட்டி மரம் 2) மேம்பாலம்
3) தரிப்பு நிலையம்

(03) புத்தகம், பத்திரிகை படிப்பவர்
1) எழுத்தாளர் 2) வாசகர் 3) மாணவர்

(04) மரவேலை செய்பவன்
1) தச்சன் 2) மேசன் 3) கொல்லன்

(05) கிறிஸ்தவர்கள் சென்று பிரார்த்தனை செய்யும் இடம்
1) தேவாலயம் 2) விகாரை 3) ஆலயம்

★ கீழே உள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

(06) யானை கட்டும் இடம் பந்தி ஆகும் (.........)
(07) மின்சாரத்தினால் நாம் நன்மை பெற முடியாது (.........)
(08) அல்லி கடல் நீரில் வளரும் தாவரமாகும் (.........)
(09) கோகிலம் என்பது கொக்கின் மறு பெயராகும் (.........)
(10) பொருளைத் தேடி எவருக்கும் ஈயாது வைத்திருப்பவன் வள்ளல் ஆவான் (.........)

★ பின்வரும் சொற்களில் வழுவற்ற சொல்லைத் தெரிவு செய்க.

(11) ● மண்பட்டி ● மம்பட்டி ● மண்வெட்டி
(12) ● பழஞ் சோறு ● பழம் சோறு ● பழந் சோறு
(13) ● வெங்காயம் ● வெண் காயம் ● வென்காயம்
(14) ● கிலவி ● கிழவி ● கிளவி
(15) ● சமையல் ● சமையள் ● சமயல்

★ பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(16) MOTHER ..............................
(17) HAND ..............................
(18) DATE ..............................
(19) BROTHER ..............................
(20) DAUGHTER ..............................

★ பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

(21) வருடம் ..............................
(22) நண்பன் ..............................
(23) பாடசாலை ..............................
(25) சகோதரி ..............................
(25) புத்தகம் ..............................

★ ஒரு சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றிய சைக்கிள்களின் நிறம், அதன் பெயர், உரிமையாளர் பெயர் என்பன பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பெயர் | சைக்கிள்களின் பெயர் | நிறம் |
|---|---|---|
| கரன் | ஏசியா | நீலம் |
| சுரேஷ் | றலி | சிவப்பு |
| பிரசாந்த் | ஏசியா | மஞ்சள் |
| தினேஷ் | லுமாலா | வெள்ளை |
| அரவிந் | லுமாலா | கறுப்பு |
| திவாகர் | ஏசியா | பச்சை |

மேலே உள்ள அட்டவணையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(26) சிவப்பு நிறத்திலுள்ள சைக்கிளின் பெயர் என்ன?
(27) கரனினுடைய சைக்கிளின் பெயர் யாது!
(28) வெள்ளை, கறுப்பு நிறங்களிலுள்ள சைக்கிளின் பெயர் யாது?
(29) 'ஏசியா' சைக்கிள் எத்தனை உள்ளன?
(30) 'றலி' சைக்கிள் எத்தனை உள்ளன?

★ விற்பனை நிலையமொன்றில் பழ வகைகளின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ● | 10 மாம்பழம் | ரூ. 160.00 |
| ● | 10 வாழைப்பழம் | ரூ. 70.00 |
| ● | 05 பப்பாசிப்பழம் | ரூ. 8.00 |
| ● | 20 அப்பிள்பழம் | ரூ. 300.00 |
| ● | 01 தோடம்பழம் | ரூ 5.00 |
| ● | 02 அன்னாசிப்பழம் | ரூ. 86.00 |
| ● | 600 கிராம் திராட்சை | ரூ. 230.00 |

மேலே உள்ள விலைப் பட்டியலைப் பயன்படுத்தி கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

(31) 5 மாம்பழம், 10 வாழைப்பழம், 200 கிராம் திராட்சை ஆகிய பழங்களை வாங்குவதற்கு எவ்வளவு பணம் செலவாகும்.?
(32) 5 பப்பாசிப்பழங்கள் ரூ. 8 எனின் 12 பப்பாசிப்பழங்களை வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?
(33) 600 கிராம் திராட்சை ரூ. 230 எனின் 250 கிராம் திராட்சை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
(34) 10 அப்பிள் பழங்கள், 5 மாம்பழங்கள் ஆகியவற்றைப் பெற்று 180 ரூ. வைக் கொடுத்த பின் மீதியாகக் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?
(35) 10 மாம்பழங்கள் ரூ. 160 எனின் 1 மாம்பழத்தின் விலை எவ்வளவு?

குறிப்பு:-

இதற்கான விடைகளை 17 - 07 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

### கல்விப்பகுதி வினா இல. 18

"வலம்புரி"
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## தரம் ஐந்து புலமைப் பரீட்சை வினா இல. 17

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

(01) க. டிலான், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(02) லோ. தர்சினி, சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை.
(03) ச. செந்தூரன், யாழ். மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.
(04) லோ. நிதர்சன், சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலை.
(05) கெ. ரொணிகியூபேட், யாழ். இராமநாதன் கல்லூரி.
(06) ம. நியூட்நிஷாந், யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி.
(07) அ. அன்ரனிராஜ், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி.
(08) ம. பிறின்ஸ்ஜோண், உடுவில் மகளிர் கல்லூரி.
(09) ர. கௌதமி, யாழ். இராமநாதன் கல்லூரி.
(10) தே. சம்யுக்தா, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
(11) செ. அஷான், உடுவில் மகளிர் கல்லூரி.
(12) வி. ஜனனி, திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.
(13) கி. சம்பூரணி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
(14) இ. நிசாந்தன், யாழ். சி.சி.த.க. பாடசாலை.
(15) ந. சுதர்சனன், யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
(16) சி. சிவறஞ்சினி, யாழ். தா.இ.த.க. பாடசாலை.
(17) மு. சிவசயந்தன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
(18) த. தக்ஷனா, யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(19) ச. சித்திரா, யாழ். நெ.மெ.மி.த.க. பாடசாலை.
(20) க. ஞானசவுந்தரி, யாழ். அராலி சரஸ்வதி ம.வி.
(21) சு. பிரிஜந்தி, யாழ். உடுவில் மான்ஸ் ம. வி.
(22) சு. தர்ஷனா, யாழ். பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை.
(23) சூ. சூரியதாட்ஷாயணி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.
(24) பா. பர்மிலா, ஏழாலை சைவ சன்மார்க்கம்.
(25) அ. அகஸ்ரின் அருள்ராஜ், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி.
(26) கு. ஜகீந்தன், யாழ். மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.
(27) ந. கீர்த்தனா, யாழ். மயிலணி சைவ ம. வி.
(28) சி. அனுசலா, யாழ். உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.
(29) சி. கிரிஷானி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
(30) கி. கம்சாயினி, யாழ். கொக்குவில் சி. சி. த. க. பாடசாலை.
(31) வே. நித்யா, யாழ். திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்.
(32) சு. பிருந்தா, யாழ். அன்னாலை மெ. மி. த. க. பாடசாலை.
(33) பு. கிரோஷன், யாழ். விவேகானந்த வித்தியாசாலை மானிப்பாய்.
(34) க. சாளினி, யாழ். ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.
(35) கோ. கிருஷாந்தி, யாழ். இணுவில் மத்திய கல்லூரி.
(36) செ. தாட்சாயினி, யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
(37) கி. ராஜ்கண்ணா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

## புலமைப்பரீட்சை வினாஇல. 17 விடைகள்

(01) மன்னன்
(02) கவிஞன்
(03) தோழி
(04) யானை
(05) மயில்
(06) அன்னம்
(07) ஆமை
(08) செவ்வந்தி
(09) சிங்கம்
(10) படிக்கிறான்
(11) கூடு
(12) காட்டில்
(13) பனிக்கட்டியினால்
(14) செவ்விந்தியர்கள்
(15) மண்புழு
(16) நீர்
(17) கண்டி
(18) திருகோணமலை
(19) லக்சபானா
(20) தேயிலை
(21) நினைவுமலர்
(22) விலாங்கு
(23) 'A'
(24) பாடசாலை
(25) கோயில்
(26) தபாற்கந்தோர்
(27) உங்களுக்கு நன்றி
(28) சிங்கம்
(29) 50 பழங்கள்
(30) 33 மிட்டாய்கள்

## ஆங்கிலதினப் போட்டிகள்

(புலோலி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்ட மட்டத்திலான ஆங்கிலத் தினப் போட்டிகள் முடிவடைந்துள்ளன.

வெகு விரைவில் வலய மட்ட ஆங்கிலத்தினப் போட்டிகள் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார். (சு-52)

★ ★ ★

(தென்மராட்சி)

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட நல்லூர் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் ஆங்கில தினப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கோப்பாய் பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு இன்றும் நல்லூர் பகுதியிலுள்ள பாடசாலைகளில் நாளை 13ம் திகதியும், யாழ். பகுதிப்பாடசாலைகளில் 14ம் திகதியும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு-77)

## சம்பள உயர்வு

(கொழும்பு)

நாட்டில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ஆயிரத்து நூறு ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப் படவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாக இளைஞர் விவகார சமுர்த்தி விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். பி திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் முதல் இச் சம்பளஉயர்வு நடைமுறைக்கு வரும்.

இச்சம்பள அதிகரிப்பு 600 ரூபாப்படிக்கு மேலதிகமாக வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் படி அவர்களுக்கு அவசர அரச இழப்பீடு 75 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவாகவும் நாளாந்த வைத்தியப் படி 100 ரூபாவிலிருந்து 200 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது.

அத்துடன் மரணச் சடங்கு இழப்பீடு 5 ஆயிரம் ரூபாவிலிருந்து 25 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இச்சலுகைகளினால் 20ஆயிரத்து 832 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நன்மை அடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-வ)

## 4600 படையினர் இதுவரை கைது

(கொழும்பு)

தப்பியோடிய இராணுவத்தினரில் 4600 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தப்பியோடிய 18 ஆயிரத்திற்கும் அதிகமான படையினரில் ஏனையோரையும் கைது செய்யும் நடவடிக்கை தொடர்வதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-வ)

## புலோலியில் கருத்தரங்கு

(புலோலி)

வடமராட்சி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிக்கும், தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான இரு நாள் 'சனத்தொகையும் குடும்ப வாழ்க்கையும்' பற்றிய கருத்தரங்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சுகாதாரத்திணைக்களத்தினர் கல்வித்திணைக்களத்தினர் பல்கலைக்கழகத்தினர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். 50 ஆசிரியர்கள் இக் கருத்தரங்கில் பங்கு பற்றினர். (சு-52)

# அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் இந்தியாவில் வரவேற்கப்பட்டார்

(புதுடில் )

இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக புதுடில்லி வந்து சேர்ந்துள்ள அவுஸ்திரேலியப் பிரதம மந்திரி ஜோன்போவேட் ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் மற்றும் பிரதமர் வாஜ்பாய் உட்பட பிரமுகர் பலரை சந்திப்பார்.

அவர் இந்தியத் தலைவர்களுடன் நடத்த இருக்கும் பேச்சுக்களில் பிஜி பற்றிய விவகாரம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 11 ஆண்டு காலத்தில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளும் முதலாவது அவுஸ்திரேலிய பிரதமர் இவராகும்: என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

# கார்கில் வெற்றி விழா உலகெங்கும் கொண்டாட விரிவான ஏற்பாடு

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் எல்லைப் பகுதியான கார்கில் வெற்றிதினம் எதிர்வரும்26 ஆம்திகதி உலகின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடுவதற்கானபூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துளளார்.

ஒவ்வொரு இல்லத்திலும் நாட்டுக்காக உயிர்கொடுத்த வீரர்களின் நினைவாக விளக்கேற்றி அஞ்சலி செய்ய வேண்டும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்படியானபோர் நிகழக் கூடாதெனவும் நாட்டைப் பாதுகாக்க மக்கள் உணர்வோடு செயற்பட வேண்டும் எனவும்நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [து]

# மெக்சிக்கோவில் கோர விமான விபத்து நான்கு குழந்தைகள் உட்பட 19பேர் பலி

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவில் அடர்ந்த காட்டுப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விமான விபத்தில் நான்கு குழந்தைகள் உட்பட 19 பேர் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

அடர்ந்த காட்டுப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றதால் சடலங்கள் மீட்கும் பணி மிகுந்த சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்படுவதாக தெரிய வருகிறது.

இதேவேளையில் கொலம்பிய சரக்கு விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதால் 7 பேர் கொல்லப்பட்டும் 13 பேர் காயமடைந்ததும், ஏற்கனவே தெரிந்ததே. (து)

## உலக தரிசனம்

# இந்தியா ஒரு தேசமல்ல பல்லினங்களைக்கொண்ட நாடு

## பாட்டாளி மக்கள் கட்சி தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா ஒரு தேசமன்றுமாறாக பல தேசங்களைக் கொண்ட ஒரு நாடு என பாட்டாளி மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தியன் என்ற தேசிய இனமே இல்லை. இந்தியா என்ற தேசமே இல்லை என்கிறது அக்கட்சி.

கடந்த யூன் 14,15 தேதிகளில் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சி பேச்சுப் பாசறைக்கென எழுதப்பட்ட கையேட்டில்மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் இந்திய தேசியம் என்கிற கருத்துக்கு இந்திய ஆளும் கட்சிகளின் நலன் அடங்கி இருக்கிறது.

அதுவே இந்திய தேசியமாகவும் இந்துதேசமாகவும் பரிணமித்திருக்கிறது.

மத்திய அரசில் அங்கம் வகித்துக்கொண்டே பா.ம.க இந்திய அரசென்பது, பெருமுதலாளிகளின் அரசு என்று கூறுகின்றது.

தமிழ்தேசியமே மெய்யானது என்றும் அந்சாதிகளுக்கு அப்பாற்பட்ட தமிழ் உணர்வு நாளடைவில் உருவாகும் என்றும் நம்புகிறது.

இந்தியா தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-து)

# இரு சிறுவர்கள் உட்பட 7 பேர் உயிருடன் தீ மூட்டிக் கொலை

## குவாட்டமாலாவில் சம்பவம்

திருட்டுத் தொழிலில் ஈடுபட்டார்கள் என்று கருதப்பட்ட இரு சிறுவர்கள் உட்பட 7 பேர் தீயிலிட்டு கொல்லப்பட்டனர் மனத்தையுருக்கும்சம்பவம் ஒன்று குவாட்டமாலாவில் இடம்பெற்றுள்ளது.

தங்கள் பொருட்களை இழந்த நிலையில் 300 இற்கும் மேற்பட்ட கிராமமக்கள் 7 பேரைப் பிடித்து விஷவாயு அறையில் அடைத்தும் பின் கல்லால் அடித்தும் மயங்கிய நிலையில் உயிருடன் தீவைத்து எரித்துக்கொன்றும் உள்ளனர்.

காப்பாற்றச் சென்ற பாதுகாப்புப்பணியாளர்களையும் அம்மக்கள் தடுத்துள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவரைத் தவிர மற்றையோர் 17 வயதுக் குட்பட்டவர்களென்றும் அவசர உதவிப் பணியாளர் ஜோர்ச் கூறியுள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (து)

# தலைவர்கள் உச்சிமகா நாட்டிற்கு ஜி- 8 அமைப்பு ஆயத்தம்

(ரோக்கியோ)

இம் மாதம் 21 ஆம் திகதி முதல் ஜப்பானிலுள்ள யொக்ககாமாவில் நடைபெற இருக்கும் தலைவர்கள் உச்சி மகா நாட்டிற்காக, நெறி முறைகளை வரைவதற்காக, தென் ஜப்பானிய நகரான மியான் பாக்கியில் ஜி.8 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்றுச் சந்தித்தனர்.

இச் சந்திப்பின் போது மேற்காசிய அமைதி நடவடிக்கை பற்றியும் கொரிய நிலை பற்றியும் ஆலோசிக்கப்பட்டன.

இவ் வமைப்பில் பிரிட்டன் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி இத்தாலி, ஜப்பான், ரஷ்யா அமெரிக்கா ஆகியன அங்கம் வகிக்கின்றன. [து]

# இந்திய- சீன நாடாளுமன்றம் விரைவில் அமைக்க முயற்சி

(புதுடில்லி)

இந்திய-சீன நாடாளுமன்றம் விரைவில் அமைக்கப்படவுள்ளதாக இந்திய அரசஉயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் அங்கம் வகிப்பார் என்றும் இம் மன்றம் இருதரப்பும் மற்றும் சர்வ தேசப் பிரச்சினைகளின் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள உதவுமென்றும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான உடன்பாடு ஒன்றை இந்திய மாநிலங்களின் துணைத்தலைவர் நஜ்மா ஹத்துல்லாவும் சீன நாடாளுமன்ற நிரந்தர கமிட்டித் தலைவர் லீபிங்கும் அமைப்பாளர்களென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி நாடாளுமன்றம் எங்கு எவ்வாறு செயற்படும் என்பது குறித்த தகவல் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. (க-து)

## மோதல்

பங்களாதேஷ்லாகூர் நகரில் பொலிஸாருக்கும் ஊடகவியலாளர்களுக்கும்இடையே ஏற்பட்ட கைகலப்பில் ஊடகவியலாளர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம், சர்ச்சைக்குரிய வரீயீடு தொடர்பாக பத்திரிகையாளர் மாநாடொன்றினை அரசு ஏற்பாடு செய்திருந்ததாகவும்,

அவ்வேளை வர்த்தக தலைவர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்ய முயன்றபோது, இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து பத்திரிகையாளர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது. (உ)

# அஞ்சல் புறாக்களின் இறப்பினால் ஒரிஸாவில் தபால் விநியோகத்தடை

(புதுடில்லி)

புறாக்கள் மூலமாகநடத்தி வந்த அஞ்சல் சேவை ஸ்தம்பிதநிலையடையலாமென ஒரிஸா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரிஸா பொலிஸாரின்இந்த புறாக்கள் மூலமான அஞ்சல் சேவை இரண்டாம் உலகப் போரை அடுத்துத் தொடங்கப்பட்டது.

கோடைகாலத்தில்கொடிய வெப்பநோயால் 38புறாக்கள் இறந்து விட்டன என்றும்இன விருத்தியால் புறாக்கள் தொகை கூடினாலும் அஞ்சல் சேவையை மட்டுப்படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

போர்க் காலத்தில் படைகளுக்கிடையே புறா அஞ்சல் சேவை தொடங்கப்பட்டது.

40 புறாக்களுடன் தொடங்கப்பட்ட இந்த அஞ்சல் சேவை ஒரிஸாவின் ஒதுக்குப்புறமான கிராமங்களில் வாழும் சமூகங்களுக்கிடையே தொடர்புப் பரிவர்த்தனை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது.

ஒரிஸா பொலிஸார் அந்த சேவையை விஸ்தரித்து 30 இடங்களிலுள்ள கூடுகள் மூலமாக சுமார் 900 புறாக்களைக் கொண்டு சேவை நடத்தப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் நடந்த கடும் புயல் காரணமாக நிவாரண உதவிகளுக்கு தேவையான பொருட்களின் இருப்புகள் சம்பந்தமான தகவல்களை புறாக்கள் மூலமாகப் பெற முடிந்ததென்றும் இரகசியம் காத்தல் சம்பந்தமான நம்பகத் தன்மை புறாக்களிடம் உண்டு என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

## செய்திப்பரல்

★ சட்டவிரோதமாகச் சூதாடிய 23 பேரை சிங்கப்பூர் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

★ சீனாவும், கானாவும் இருதரப்பு உறவில் பரஸ்பர உதவிகள் பெறஇருக்கின்றன.

★ ஆபிரிக்க நாடுகளுடன் சேர்ந்து சீனா தொழில் துறைகளில் ஈடுபட விரும்புகிறது.

★ ஜேர்மனியில் உலக கால் பந்தாட்டம் நடத்தும் தீர்மானத்தில் ஊழலாம், விசாரணை தொடரும்.

★ சொலமன் தீவில் காயமடைந்து மருத்துவ மனையில் இருந்த இரு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ பீஜிங்நகரில் தொழிற் சாலையில் நீராவிக் குழாய் ஒன்று வெடித்ததில் 6 பேர் இறந்தனர். (து)

# எயிட்ஸ் நோய் தடுப்பு மகாநாடு தென் ஆபிரிக்காவில் ஆரம்பம்

## அளவிற்குமிஞ்சிய வறுமை காரணமாம்

(பிறிட்டோறியா)

எயிட்ஸ்நோய் தடுப்புபற்றிய 13 ஆவது சர்வதேச மகாநாடு தென்னாபிரிக்காவில்நேற்று ஆரம்பமாகியது.

தொடக்கவிழாவில் தென்னாபிரிக்க தலைவரும் உரை நிகழ்த்தினார். அவ்வேளை 'அளவுக்குமிஞ்சிய வறுமை' என்பது எயிட்ஸ்நோய் தலைவிரித்தாடுவதற்கு அடிப்படைக்காரணமாகுமென்று அவர்கூறினார்.

'மௌனத்தை முறியடிப்பு என்பது இம் மகாநாட்டின் குறிப்பாகும்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மற்றும் பிரதேசங்களைச்சேர்ந்த 11 ஆயிரத்துக்குமேலான பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர் என்றுசொல்லப்படுகிறது.

இதற்கிடையில் மகாநாட்டை ஒட்டி எயிட்ஸ் மருந்துகளை குறைந்தவிலைக்கு விற்கவேண்டுமென்று கோரி தென்னாபிரிக்க அங்கிலிக்கன் சபை அர்ச்பிசப் தலைமையில் ஊர்வலமொன்று ஏற்பாடாகி இருந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எயிட்ஸ் விவகாரங்களைக் கவனிக்கும் ஐ.நாவின் அதிகாரி 3 மில்லியன் டொலர்களைத் தந்துதவும்படி உலகநாடுகளை கேட்டுள்ளார். (து)

## பொதுமக்கள் நையப்புடைப்பு

திருநெல்வேலி மற்றும் பரமேஸ்வராச்சந்தி ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம்காலை படையினர் பொது மக்கள் மீது கெடுபிடிகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளால் வந்த பொதுமக்கள் சிலர் படையினரால் நையப்புடைக்கப்பட்டதாகவும் மேலும் தெரியவருகிறது. (ச)

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

உள்ளம் இலாதவர்எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு

- குறள்

# வலம்புரி

## நக்கின மாடு கெடுத்தது போல்

ஆசிரியவாண்மையைப் பெருக்க பயிற்சியும் பட்டப் படிப்புக்களும், பல நூல் பரப்புகளில் உறவாடலும் பெரிதும்வேண்டப்படும். கல்வியலாளர்கள் ஆசிரியர்க்கு தொழிற் பயிற்சி வேண்டுமென்பதை மனதார ஒப்புக்கொள்வர். முன்யோசனையும் தீர்க்க தரிசனமும்அற்றவர்கள் நிர்வாகக்கடிவாளத்தைப் பிடிக்கக் கூடாது. கடைசிச் சந்தர்ப்பம் ஆசிரிய காலாசலைப் பயிற்சி என்று பேசப்படும் வேளை இயன்றவரை உதவுகரம் கொடுத்து அனைத்து ஆசிரியர்களையும் காலத்தகுதியுடன் பயிற்றுவிக்க வகை செய் திருக்க வேண்டியது கற்றவர்கள் கடமையாகும்.

உரிமை கோரிச்சாத் விகப்போராட்டத்தில் குதித்த ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்கை நாடியிருக்கிறார்கள். கையால் கிழிக்க வேண்டியபனங்கிழங்கை ஆப்புக்கொண்டு கிழித்த மாதிரி. அரசியல் என்றாலென்ன, சமூக சம்பந்தமான எக்காரியங்களாலும் பெரியவேதனைப் பிரசவமாகத்தான நடைபெறுவது மண்ணின் தன்மை போலும்.

நடந்தவை நடந்து போச்சு பரவாயில்லை. இனி நடக்கப்போவது நலமாக நடக்க வேண்டும். பிழையை ஒப்புக்கொண்டு நீதிக்குக் குரல்கொடுக்க சம்பந்தப்பட்ட அனைவரும் அணிதிரளவேண்டும். ஒருவகையில் வாண்மை விருத்தி. மறு புறம் மாணவர்க்கு அறிவுப்புலம் துலக்க முற அரியதொரு வாய்ப்பும் ஆகும்.

தெரிவில் அகப்படாதவர்கள்கூறப்பட்டநொண்டிச் சாட்டிற்கு வெகு தொலைவில் நிற்கின்றார்கள். தோய்ந்து எழுந்தவர்கள் பயிற்சிக் கலாசாலையில். இத்தகைய தில்லுமுல்லு நீதியற்ற செயல்கள் அரச அதிகாரத்தின் தடுமாற்றமா அன்றி பின் கதவுச் சேட்டையாஎன்று நீதி கிடைக்காதவர்கள் நெஞ்சம் அழிகின்றார்கள்.

தெரியப்படாது புறக்கணிக்கப்பட்டவர்கள் அனைவரும் பயிற்சி நெறிக்கு உரிய உரியவகுதிகளுக்கு அனுமதிக்கப்படகதவுகள் அகலத்திறக்கப் பட்டும்- அன்னவர் துன்பங்கள் அகலட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

## இடம் பெயர்ந்த மாணவர் கவனத்திற்கு

(இணுவில்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் இந்து சமய, இந்துநாகரிக பரீட்சைகளுக்கு தோற்றும் தென்மாரட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் தத்தமது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பரீட்சை நடைபெறும் படாசாலைகளில் பரீட்சைகளைஎழுதலாம் என சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (உ-49)

## ✱ 1995ஆம் ஆண்டு இடம்பெயர்வின்பின்

# 35 ஆயிரம் பயனாளிகளுக்கு

# மின் இணைப்புகள் வழங்கப்பட்டன

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்தில் கடந்த 95 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வின் பின் மக்கள் அங்கு மீளக் குடியேற ஆரம்பித்ததில் இருந்து இதுவரை 35 ஆயிரம் பயனாளிகளுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக மின்னிணைப்புப் பெற்றவர்களுக்கும் மீள் மின்னிணைப்பு பெற்ற பழைய மின் பாவனையாளர்களில் ஒரு தொகுதியினருக்குமாக இற்றை வரை 10 ஆயிரம் மின்மானிகள் பொருத்தப்பட்டிருப்பதாகவும் மின் இணைப்பு மற்றும் மின்மானி பொருத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் நிலவும் சீரற்ற மின் விநியோகம் குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

தற்சமயம் கையிருப்பில் போதிய மின்மாற்றிகள் இன்மையால் பழைய மின்மாற்றிகளையே மீண்டும் திருத்தம் செய்து பாவிக்க வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளமையினாலேயே சீரற்ற மின் விநியோகம் காணப்படுகிறது.

இதனைச் சீர் செய்யும் வகையில் வெளிநாட்டில் இருந்து புதிய மின் மாற்றிகள் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவை வந்து சேர்ந்ததும் உரிய ஒழுங்கு முறையில் மீண்டும் மின்விநியோகம் இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-14)

## தேர்தல் கண்காணிப்பு பணியில்

# வெளிநாட்டவர் ஈடுபடுவதற்கு ஆணையாளர் கடும் எதிர்ப்பு

[கொழும்பு]

நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தலின் போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்களது பங்களிப்புக்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா கடும் எதிர்ப்புத்தெரிவித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு கண்காணிப்பாளர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ள தேர்தல் ஆணையாளர், வெளிநாட்டில் இருந்துவரும் வெவ்வேறு குடியரசுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள், இலங்கையின் நடைமுறைகள் தெரியாததால் தமது நாட்டில் கைக்கொள்ளும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என நினைக்கக்கூடும்.

அத்துடன், சகல தேர்தல் சாவடிகளையும் கண்ணுற முடியாத நிலையில் அவர்களது எண்ணம் நாட்டின் முழுமைக்குமே பொதுவான கருத்தாக இருக்க முடியாது எனவும், தேர்தலின்போது இடம்பெறும் மோசடிகளுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது போதுமான அதிகாரங்கள் எதுவும் இல்லையெனவும், வெளிநாட்டு கண்காணிப்பாளர் வருவது குறித்து தேர்தல் ஆணையாளர் தனது எதிர்ப்பை தெரிவித்திருப்பதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. (உ

# கடற்படைக்கு ஆட்சேர்ப்பு

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா கடற்படைக்கு மாலுமிகளைச் சேர்த்துக் கொள்வதற்கான ஆட்சேர்ப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மாலுமிகளாக இணைய விரும்புவோர் கடற்படை முகாம்களுக்குச் சென்று இணைந்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் ஒரு பாடத்தில் சித்தியடைந்த 18 இற்கும் 25 இற்கும் இடைப்பட்ட வயதையுடையவர்கள் மாலுமிகளாக இணைந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# யாழ். நகரில் இரு இளைஞர்கள் படையினரால் கைது

[யாழ்ப்பாணம்]

இரு இளைஞர்கள் யாழ். நகரப்பகுதியில் வைத்து கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நபர்கள் இருவரும் தற்போது 512 படையணியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்கள் இக்கைது செய்ததற்கான ரசிது வழங்கப்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த குற்றாளம் முரளிதரன் (வயது 20) கச்சேரி கிழக்கை சொந்த இடமாகவும் நாவலர் வீதியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்தசாமி கிருபாகரன் (வயது 19) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். (சு-12)

## காங்கேசனில்

# எரிபொருள் விநியோகக் குழாய் வெடிப்பு விநியோகத்தில் பாதிப்பு ஏற்படாது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை எண்ணெய் களஞ்சியத்தில் உள்ள விநியோகக் குழாயில் ஏற்பட்ட வெடிப்பையடுத்து திருத்த வேலைகள் உடன் மேற்கொள்ளப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில், கப்பலில் இருந்து மேற்படி களஞ்சியத்திற்கு செல்லும்குழாயிலேயே இவ் வெடிப்பு ஏற்பட்டதாகவும் இதனால் மண்ணெண்ணெய், பெற்றோல் விநியோகத்தில் எதுவித தடங்கலும் ஏற்பட மாட்டாது என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விநியோகப் பணிகளைமேற்கொள்வதற்கு புதிதாகஇருபவுசர்கள்சேவையில் ஈடுபடவுள்ளதால் அடுத்தவாரமளவில்நிலைமை ஓரளவு சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

## மலையக ரயில் சேவை பாதிப்பு

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்குரயில் வட்டவளை எனும் இடத்தில் தடம் புரண்டதால் மலையகத்துக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. (உ)

## பால்மா வழங்கல்

[மந்திகை]

வடமராட்சிகிழக்கு, குடத்தனைப் பகுதியில் உள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் பால்மா வழங்கப்பட்டுள்ளது.

இது பருத்தித்துறைப் பிரதேச சபையின் அனுசரணையுடன் பருத்தித்துறை சுகாதார அதிகாரி பணி மனையினரால் வழங்கப்பட்டுள்ளது. [சு-23]

## கடந்த மாதத்தில். மட்டும்

# கிளிநொச்சி மருத்துவ மனையில் 15 ஆயிரத்து 590பேருக்கு சிகிச்சை

[வவுனியா]

மருந்துத்தட்டுப்பாடு நிலவுகின்ற சூழ்நிலையிலும், அக்கராயனில் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் கடந்த ஜூன் மாதம் மட்டும் 15 ஆயிரத்து 590 பேர் சிகிச்சைபெற்று சென்றிருப்பதாக மேற்படி வைத்தியசாலை வட்டார அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இவர்களில் 6120 பேர் மலேரியா காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுச் சென்றதாகவும்2626 பேர் சாதாரண காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றுச் சென்றதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்ட 152 பேரும், விசர்நாய்க்கடியினால் பாதிக்கப்பட்ட 89 பேரும் இவ் வைத்தியசாலையில் மருத்துவ உதவி பெற்றுச் சென்றுள்ளனர். மற்றும் உரிய சிகிச்சை வழங்கப்படும் வசதி இன்மையால் 14உயிரிழப்புக்கள்இடம் பெற்றிருப்பதாகவும் இவற்றில் இரத்தசோகை காய்ச்சல், செப்ரீசிமியா நோய்களினால் ஒவ்வொருவர் இறந்திருப்பதாகவும் அறிக்கையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேசமயம். நீண்ட காலமாக வன்னிப் பகுதியில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதும். மருந்துகளை அங்கு எடுத்துச் செல்ல பாதுகாப்பு படையினர் அனுமதி மறுத்து வருவதும் தெரிந்ததே. [க-உ]

## யாழ். மாவட்டத்தில்

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

## ஈ. பி. டி. பி. முக்கியஸ்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி பிரதி அமைப்பாளர் நிஷந்தன் உறுதியளித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அண்மையில் ஈ.பி.டி.பி முக்கியஸ்தரை சந்தித்துதமது நிலைதொடர்பாக விபரமாக எடுத்துரைத்ததன் பேரிலேயே மேற்படி உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், யா/மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பெயர்விபரங்களை உடனடியாகவே சங்க அங்கத்தவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் உடனடியாகவே அப்பட்டியலை கொழும்பிலுள்ள உரிய திணைக்களத்திற்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (உ)

### வடபகுதி நிலை குறித்து

# ஐரோப்பிய தூதுக் குழுவிற்கு ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

வடபகுதியின் பாதுகாப்பு குறித்தும். அங்கு இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாகவும் அவற்றுக்கு தீர்வுகாணும் வழிவகை சம்பந்தமாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.

இப்பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தைகளில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் கலந்து கொண்டார்கள்இச்சந்திப்பின்போது வடபகுதியின் பாதுகாப்பு நிலைமைகள் அது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் வடக்குக் கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்தும் ஜனாதிபதி தூதுவர்களுக்கு விளக்கிக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## "பவுஸர்" எதுவும் வரவில்லை பெற்றோலிய அதிகாரி தகவல்

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எந்தவிதமான 'பவுஸர்'களும் 'குமண' கப்பலில் ஏற்றி வரப்படவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரி ஒருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்போது காங்கேசன்துறையில் உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் குமண விலோ அல்லதுலங்காமுடித்த கப்பலிலோ பவுஸர்கள் எதுவும் எடுத்துவரப்படவில்லை என்றும், அடுத்து வரவிருக்கும் கப்பல்களில் இவை எடுத்து வரப்படலாம் என்றும் தெரிவித்த அவர் இங்கு எடுத்துவர இருக்கும் இரு பவுஸர்களும் தலா 13 ஆயிரத்து 200 லீற்றர் எரிபொருள் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவேஇரண்டு பவுஸர்கள் குமண கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டதாக வெளியான செய்தியினையும் அந்த அதிகாரி மறுத்துள்ளார். )வ)

## கள்ளுத் தவறணை கலாட்டா கத்தி வெட்டில் முடிந்தது

தாவடிப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் மூன்று பேர் கத்தி வெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சேதிங்கராசா நேசராசா (வயது30), ஆறுமுகம் தர்மலிங்கம் (வயது 32), பசுபதி வடிவேல் (வயது35) ஆகியோரே கத்திவெட்டுக்கு இலக்கானவர்களாவர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது: தாவடிப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் சிலர்பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், அதில் காயமடைந்த மூவரும் தலையிட்டபோது இன்னொரு கோஷ்டியின் கத்தி வெட்டுக்குஆளானதாகவும் தெரியவருகிறது. (ந-12)

## கிளிநொச்சியில் இளைஞர் காயம்

(வவுனியா)

கிளிநொச்சி செல்வபுரம் பகுதியில் காணி ஒன்றில் இருந்த மர்மப் பொருள் வெடித்ததில்இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது:

கிளிநொச்சி செல்வபுரத்தைச் சேர்ந்த ந. மங்களேஸ்வரன் (வயது 17) என்பவரே படுகாயம் அடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-7)

---

அதிபர்,......

சைக்கிள், மற்றும் மாணவர்களின் துவிச்சக்கரவண்டிகளும் பலத்த சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

சம்பவ தினமான நேற்று கல்லூரியின் அலுவலக உதவியாளர் காலை 8 30 மணியாகியும் பாடசாலையைத் திறக்காமையினால் ஆசிரியர்கள், மாணவர்கள் கல்லூரியின் வாசலில் நீண்டநேரம் காத்துநின்றனர்.

அப்போது காலம் தாழ்த்தி வந்த உதவியாளருக்கும் அதிபருக்கும் இடையே கருத்து முரண்பாடு மூற்றியது.

இதனைத்தொடர்ந்து உதவியாளருக்கு ஆதரவாக இடம்பெயர்ந்தவர்களில்சிலர் அதிபருடன் தர்க்கம் புரிந்து தாக்கியதாகவும் அதனை அடுத்தே மோதல்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலின் போது பரவலான கல் வீச்சுக்கள் இடம்பெற்றதாகவும், ஈடு கொடுக்கமுடியாது மாணவர்கள் கூக்குரலிட்டவாறு மதில் பாய்ந்து தப்பியோடியதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இம்மோதல் சம்பவம் இடம்பெற்றதை அடுத்து கூழாவடியிலுள்ள இராணுவத்தினரிடம் முறையிடப்பட்டது. இதனையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த இராணுவத்தினர் இடம் பெயர்ந்த மக்களை விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துப் பாடசாலை நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று கூறியதுடன் சிலரின் அடையாள அட்டைகள், குடும்ப அட்டைகளை எடுத்துச்சென்றனர். இதன் போது தப்பியோடிய இருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது: (வ)

## விளையாட்டுச் செய்தி

## இலங்கை அணி வென்றது

(கொழும்பு)

இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே கொழும்பு எஸ். எஸ். சி. விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற 'சிங்கர்' இண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுப் போட்டியில் இலங்கை அணி 8 விக்கற்றுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கற்றுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப்பெற்றது

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 27.3 ஓவர்களில் 2 விக்கற் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கற்றுக்களால் வெற்றியீட்டியது.

ஆரம்பத் துடுப்பாட்டவீரர் குணவர்த்தன 87 ஓட்டங்களைப் பெற்றதுடன் போட்டியின் சிறப்பாட்டக் காரராகவும் தெரிவானார். (ச-4)

## கதிர்காம யாத்திரிகர் 9 பேர் விபத்தில் பரிதாப மரணம்

பம்பலப்பிட்டியிலிருந்து கதிர்காமத்திற்கு வானில் சென்ற யாத்திரிகர்கள் ஒன்பது பேர் விபத்தொன்றில் கொல்லப்பட்டுள்ளனர் 6 பேர் படுகாயமடைந்தனர். பம்பலப்பிட்டியிலிருந்து கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் மாத்தறை நோக்கி வந்துகொண்டிருந்த இ போ. ச. பஸ்வண்டியுடன் மோதியதினால் வானில்சென்ற ஒன்பது பேர் பரிதாபகரமாகக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## உயர் தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை இம்மாதம் 31ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பரீட்சைக்கான நேர அட்டவணை நேற்று முன்தினம் பரீட்சைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது

ஜூலை 31ஆம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் முதல் முறையாக இம்முறை பொதுச் சாதாரணப் பரீட்சை வினாத்தாள்களுக்கும் விடை எழுதவேண்டும். இப்பாடம் பரீட்சை முடிவு தினமான ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

சுமார் ஒன்றரை லட்சம் மாணவர்கள் இம்முறை இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## சுழிபுரம் கிழக்கில் பஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த பதினைந்து ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த சுழிபுரம் கிழக்குப் பகுதிக்கான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை மீண்டும் இன்று ஆரம்பித்து வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத்தலைவர் என். திரிலோகநாதன் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளருடன் தொடர்புகொண்டதையடுத்தே இச்சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவையை ஆரம்பிக்குமாறு பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கமும் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது:

## வவுனியாவில் இராணுவம் சுற்றிவளைப்பு

வவுனியா வாரிக்குட்டியூரில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கு தேடுதல் நடத்தியதுடன் 15 இளைஞர்களின் அடையாள அட்டைகளை வாங்கிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

இந்த அடையாள அட்டைகளுக்குரியவர்களை விசாரணை செய்வதற்காக இன்று தம்பிவீடு படைமுகாமிற்கும் பிறவுண் பொலிஸ் நிலையத்திற்கும் வருமாறு தெரிவித்துள்ளதாகவும் இதனை அடுத்து இவ் இடம்பெயர்ந்தோர் முகாமில் அச்சம் நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-வ)

---

விடுதலைப்புலிகள் ...

யோசனை கூறியுள்ளார்.

அந்த யோசனையில் ரணில் மேலும் தெரிவித்திருப்பதாவது, இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு யோசனையில் எமது பங்களிப்பு முடிவடைந்து விட்டது பந்து இப்போது அரசின் பக்கமே உள்ளது.

தீர்வு யோசனைகளை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்து அவர்களது விருப்பத்தை அறிந்துகொள்வது அவசியம் என்றும், அவர்கள் சம்மதமில்லாத தீர்வு யோசனை பாராளுமன்ற அங்கீகாரத்துக்கு அனுப்பி வைப்பதில் பிரயோசனமில்லை என்றும் இதனை ஐ. தே. கட்சி ஏற்காது என்றும் தெரிவித்துள்ளார்; (வ)


## லிபேட்டி

அச்சுவேலி

நாடக பாட ஆற்றுகை

ஒதெல்லோ

(ஒளிநாடா)

16.07.2000 ஞாயிறு

காலை 10.00 மணி

[பு.நே]

[ஒரு காட்சி மட்டும்]

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

[வி-644]


## ✶ மொறட்டுவ பல்கலை மாணவன் கடத்தல் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு!

வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்ட வவுனியாவைச்சேர்ந்த மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியற்பீட மூன்றாம் வருட மாணவன் சக்திவேல் எங்கு இருக்கிறார் என இதுவரை உத்தியோக பூர்வமாக எந்த வித அறிவித்தலும் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கவில்லையென பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவன் சக்திவேல் பயங்கரவாத குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மாணவனது கைது தொடர்பாக கொழும்பு மாவட்ட எம். பி. ஆர். யோகராஜன் தொல்லை தவிர்ப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றில் முறையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம்மாணவனது பெற்றோர் வவுனியாவில் இருந்து மொறட்டுவ சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

அரியாலை......

- கப்டன்திலகன்/மலரவன் (நல்லையா தவச்செல்வன்) நெடுங்கேணி
- லெப். புரட்சிக்காவலன் (பரமானந்தம் ரமணன்) யாழ்ப்பாணம்
- லெப். இனியவன் (உருத்திராகவிவசந்தராசன்) யாழ்ப்பாணம்
- 2ம் லெப். செழியன் (பொன்னம்பலம் கவிதாஸ்) யாழ்ப்பாணம்
- 2ம் லெப். மறைவாணன் (நாகராஜா சிவலிங்கநாதன்) வவுனியா
- கலைமாறன் [ஜேசுதான் ரவேஸ்டேவிஷன்] யாழ்ப்பாணம்
- லெப். திலகர (ஆறுமுகம் மதிவதனி) யாழ்ப்பாணம்
- 2ம் லெப். அரசலா [கதிர்காமத்தம்பி கலியுகராணி] மட்டக்களப்பு (ச-7)

## செஞ்சிலுவைக் கப்பல் இன்று வரும்

நோயாளர்களுக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கப்பல் இன்று புதன்கிழமை 11 மணிக்கு வரவுள்ளதாக செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கப்பலில் யாழ். குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதுடன் நோயாளர்களும் வரவுள்ளனர். (வ-3)

---

மானிப்பாய்......

யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை ஆகிய பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள 120 குடும்பங்கள் இங்கு தங்கியுள்ளனர்.

இவர்களில் 30 குடும்பங்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுத்திருப்பதாகவும் இவர்கள் அங்கு குடியேற மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!